பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 19 செவ்வாய்க்கிழமை 29.07.2025 கதிர் 262

## இனி இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் சொத்து விவகாரம் இப்போதைக்கு ஓயாது போலத் தெரிகிறது. அவரது சொத்துக் குவிப்புக்கு எதிராக பொலிஸ் ☞2

## சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பதவிகள் ஜே.வி.பியினருக்கு

### சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பதவிநிலைகளையும் அங்கத்துவங்களையும்ஜே.வி.பிஉறுப்பினர்களுக்குப்பகிர்ந்து கொடுத்து, அவற்றைப் பகிரங்கப்படுத்தி வரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த நியமனங்கள் ஜே.வி.பி. கட்சி அலுவலகங்கள் மற்றும் கட்சியின் பிரதேச பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகங்களால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ☞3

## மாகாண சபைத் தேர்தலை நடத்தாமலே இழுத்தடிக்கப் பார்க்கின்றது ஆளும்தரப்பு

### தயாசிறி எம்.பி. கடும் சாடல்

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைகள்தேர்தலைநடத்துவதற்குஇந்த ஆளும்தரப்புஎவ்விதமானநடவடிக்கைகளையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் பதவி காலத்தை நிறைவு செய்வதற்கே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. என்று புதிய ஜனநாயக முன்னணியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிப் பெறவில்லை. இருப்பினும் பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிப் பெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சியாக இருந்தும் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகள் 23 இலட்சத்தால் சரிந்தன.

மாகாணசபைகளின்பதவிக்காலம் நீண்ட காலத்திற்கு முன்பே நிறைவடைந்துள்ளது. இதற்குக் கடந்த ஆளும்தரப்புக்களும் ☞2

## இலங்கை சமையற் கலைஞர்கள் மரபுரிமையின் தூதர்களும்கூட

### பிரதமர் ஹரினி பெருமை

எமது சமையற் கலைஞர்கள் வெறும் சமையல் செய்பவர்கள் மட்டுமல்லர். அவர்கள் மரபுரிமையின் தூதர்களும் ஆவர். அவர்கள் பரிமாறும் ஒவ்வொரு உணவிலும் மணமூட்டும் பொருள் இடம் மற்றும் ☞3

## அடுத்த வருட முதல் காலாண்டிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள்

### அமைச்சருக்கு பஃவ்ரல் அமைப்பு கடிதம்

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டதிருத்தங்களை மேற்கொண்டு, அடுத்த வருடம் முதல் காலாண்டிலாவது தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாரச்சி வலியுறுத்தியுள்ளார்.

பொது நிர்வாக,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற ☞3

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகளில் சர்வதேசக் கண்காணிப்புகள் மிக அவசியம்

### சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்து

நீதியைநிலைநாட்டுவதில்உள்ளகப் பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகளில் நிலையான சர்வதேச கண்காணிப்பு உள்வாங்கப் படவேண்டியது மிக அவசியமாகும். அதற்கமைய சுயாதீன சர்வதேச தடயவியல்நிபுணர்கள்மற்றும்மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்றுசர்வதேசஜூரர்கள்ஆணைக்குழு இலங்கை ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும்ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பானதீர்மானத்தைப்புதுப்பிக்க வேண்டும்எனவும்அந்தஆணைக்குழு வேண்டுகோள்விடுத்துள்ளது.

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியில் தற்போது அகழ்வுப் பணிகள் அரியாலை, சித்துபாத்தி இந்து மயானத்தில் இடம்பெற்றுவரும்நிலையில்,சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் ஞாயிற்றுக்கிழமை வரையான காலப்பகுதியில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்குச்சொந்தமானவைஎன சந்தேகிக்கப்படுபவைஉள்ளடங்கலாக 101எலும்புக்கூடுகள்மீட்கப்பட்டுள்ளன. உண்மைமற்றும்பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை நோக்கிய ☞2

## செம்மணியில் நேற்றும் புதிதாக 3 எலும்புக்கூடுகள் அடையாளம்

செம்மணிமனிதப்புதைகுழியில்,அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் இடம்பெறும் அகழ்வுப் பணிகளில் நேற்றும் புதிதாக மூன்று என்புத்தொகுதிகள் அடையாளம்காணப்பட்டன. இவற்றுடன் இந்தப் பகுதியில் மொத்தம் 104 மனித எலும்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.





செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 23ஆம் நாள் பணிகள் நேற்று இடம்பெற்றன.

நேற்றைய அகழ்வின் போது மூன்று மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. ஒரு ☞3

## செம்மணியில் அகழ்ந்து எடுக்கப்படும் என்புத் தொகுதிகளைப் பரிசோதித்து முடிவுகளை அறிவிக்கும் முழுப் பொறுப்பையும் சர்வதேச நிபுணர்களிடம் வழங்கவேண்டும்

### அகழ்வுப் பணிகளை நேரில் பார்த்த பின்னர் சுமந்திரன் வலியுறுத்து

செம்மணி மனிதப் புதைகுழியின்ஒருபகுதியாகிய அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்டுள்ளமனிதப்புதைகுழியிலிருந்து மீட்கப்படும் என்புத்தொகுதிகள் பற்றிய பரிசோதனைகளை மேற்கொண்டு அதன் முடிவுகளை அறிவிக்கும் பொறுப்பு முழுவதும் சுயாதீனமாகச் செயற்படுகின்ற சர்வதேச நிபுணர்களிடத்தே கையளிக்கப்படவேண்டும் என்றுதமிழ்அரசுக்கட்சியின் பொதுச்செயலாளர்சுமந்திரன் வலியுறுத்தினார்.

லண்டனில் ☞2

## 2026 நடுப்பகுதியில் மீள பொருளாதார நெருக்கடி

### எச்சரிக்கிறார் உதய கம்மன்பில

2026ஆம்ஆண்டுநடுப்பகுதியில்மீண்டும்பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறும் சூழலே காணப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடைந்த போக்கில் செல்வதைஅவதானிக்கமுடிகிறது. எதிர்க்கட்சிகள்அனைத்தும் ஒன்றிணைந்தால்அடுத்தாண்டுபொதுத்தேர்தலைநடத்தும் சூழலை ஏற்படுத்தலாம் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற ☞3

## மாலைதீவு அரசுத் தலைவருடன் அநுர நேற்று இரு தரப்புப் பேச்சு

மாலைதீவுக்குஉத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ள அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும், மாலைதீவு அரசுத் தலைவர் கலாநிதி முகமது முய்சுவிற்கும் இடையிலான இருதரப்பு பேச்சுக்களில் நேற்று மாலை மாலைதீவு அரசுத்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மாலைதீவு அரசுத் தலைவர் அலுவலகத்துக்கு வருகை தந்த அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவை, மாலைதீவு அரசுத் தலைவர் வரவேற்றார்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க விருந்தினர் ☞3

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னாள் கடற்படை தளபதிக்கு ஜூலை 30 வரை விளக்க மறியல்

கைது செய்யப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதிநிஷாந்தஉலுகேதென்னவைஎதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வு பணிப்பாளராக இருந்தகாலத்தில்பொத்துஹெரபகுதியில்நடந்த ஒருகடத்தல்தொடர்பானவிசாரணைதொடர்பாக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினர்இன்று (28) முன்னாள் கடற்படைத் தளபதியைக் கைது செய்தனர்.

அதன்படி, முன்னாள் கடற்படைத் தளபதி இன்றுபொல்கஹவெலநீதவான்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், சந்தேக நபரை 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

## இனி இது .....

நிதிக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இந்த விவகாரம் பெரும் பரபரப்பானது. சிறீதரன் அந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார். அது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படடு உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று அவரே வலியுறுத்தினார்.

ஞானம் என்ற பெயரில் உள்ள ஐஸ்கிறீம் கடைகள் வேறொரு முதலாளிக்குச் சொந்தமானவை என்றும் தாரணி என்ற பெயரில் இயங்கும் 'சுப்பர் மார்க்கெட்'டுக்கள் சிறீதரனின் தம்பிக்குச் சொந்தமானவை என்றும் அவரது ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் விளக்கமளித்து வருகின்றனர்.

வழக்கும்போலவே இந்தக் குற்றச்சாட்டு வெளிவந்ததும் சமூக ஊடகங்களில் ஒரு பகுதியினர்சிறீதரனைஅரசியல்மோசடியாளர் என்று வசைபாட, இன்னொரு தரப்பினரோ இது சிறீதரனுக்கு எதிராக சுமந்திரன் தரப்பினரால்கட்டவிழ்த்துவிடப்பட்ட பரப்புரை என்று வசைபாடவென அது ஒரு பக்கத்தில் விவாதம் போகிறது.

இதற்கு மத்தியில் சிறீதரன் பற்றிய முறைப்பாட்டை நிதிக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வழங்கிய நபரும் விடுவதாக இல்லை. அவரது முறற்பபாடுகள் தொடர்பில் சிறீதரனின் விளக்கங்களும் அவரது ஆதரவாளர்களின் உண்மைக் கண்டுபிடிப்புக்களும் வெளியாகிய நிலையில் நேற்று அவர் மீண்டும் செய்தியாளர்களைச் சந்தித்து தனது முறைப்பாடு தொடர்பிலும் சிறீதரனின் சொத்துக் குவிப்புத் தொடர்பிலும் விளக்கமளித்துள்ளார். அதில் ஞானம் ஐஸ்கிறீம் கடைகள் மற்றும் தாரணி சுப்பர் மார்கெட் ஆகியவற்றுடன் சாராய விற்பனை நிலையங்களும் யாருக்குச் சொந்தமாக இருக்கின்றன என்பதையும் அதனுடன் சிறீதரன் எப்படித் தொடர்புபடுகின்றார் என்பதையும் விளக்கியுள்ளார்.

அவர் எல்லா விடயங்களையும் சிங்களத்தில் கூறியிருப்பதால், நாளை உங்களுக்கு அது பற்றிய முழுமையான விவரங்களைத் தருகின்றேன்.

.................................

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவின் மண்டத்தீவு பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்கு கேரளகஞ்சாசோதனைநடத்தச்சென்றநான்கு பொலிஸாரை, உள்ளூர்வாசிகள் கொண்ட ஒருகுழுதடுத்துவைத்துசிறைப்பிடித்துள்ளது. பின்னர்மேலதிகமாகப்பொலிஸாரும்அதிரடிப் படையினரும்வரவழைக்கப்பட்டே அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

ஒரு போலீஸ் சார்ஜென்ட் மற்றும் மூன்று கான்ஸ்டபிள்கள் இவ்வாறு சிறை வைக்கப்பட்டிருந்த பின்னர் மீட்கப்பட்டனர்.

மண்டத்தீவில் உள்ள ஒரு வீட்டில் கேரள கஞ்சா இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், ஜூலை 27 மாலை சோதனைக்காகப் பொலிஸார் சென்றுள்ளனர். ஆனால் சோதனையில் அங்கு எந்தக் கஞ்சாவும் கிடைக்கவில்லை.

வீட்டில் பொலிஸ் சோதனை நடக்கிறது என்றுதெரிந்ததும்அங்குகூடியஒருகுழுவினர் பொலிஸாருடன் முரண்படத் தொடங்கினர். அந்த வீட்டில் கஞ்சா இருப்பதாகத் தகவல் தந்தவர் யார் என்பதைச் சொன்னால்தான் பொலிஸாரை அங்கிருந்து வெளியேற அனுமதிப்போம் என்பதே முரண்பாட்டுக்குக் காரணம். அதாவதுகாட்டிக்கொடுத்தவர்களைப் பொலிஸார் காட்டிக்கொடுக்க வேண்டும் என்பதே அவர்களின் வலியுறுத்தலாக இருந்தது.

முரண்பாடு முற்றியதை அடுத்து அங்கிருந்தஅருட்தந்தைஒருவர்பொலிஸாரை தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். எனினும் அவர்களைப் பின்தொடர்ந்த குழுவினர் காட்டிக்கொடுத்தவர்களின் விவரங்களைக் கேட்டு தொடர்ந்து முரண்டு பிடித்தனர். அதனை அ-டுத்தே மேலதிக பொலிஸாரும் அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டு சிறைப் பிடிக்கப்பட்ட பொலிஸார் மீட்கப்பட்டுள்ளனர்.

காலம் எப்படியெல்லாம் மாறிவிட்டது பாருங்கள். போகிற போக்கில் கஞ்சா கடத்தல்காரர்களும் போதைப் பொருள் கடத்தல்காரர்களும் வைத்ததுதான் சட்டம் என்கிற நிலை வரும்போல் உள்ளது.

.................................

தற்போதைய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்தான். ஆனால் அவர் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளார் என்பதால் பதில் பொலிஸ் மா அதிபரின் பொறுப்பில் பொலிஸ் திணைக்களம் செயற்படுகின்றது. ஓகஸ்ட் 5 தேசபந்துவைப் பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து நீக்கும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் எப்படியும் நிறைவேற்றப்பட்டுவிடும். அதன் பின்னர் பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமாகிவிடும். அப்படி வெற்றிடமாகப் போகும் பதவியை யார் தட்டிப்பறிப்பது என்பதில் இப்போதே அடுத்த நிலையில் உள்ள அதிகாரிகள் மத்தியில் போட்டாபோட்டி நிலவுகின்றதாம்.

தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, நிர்வாகம் மற்றும் மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்கு (குற்றம் மற்றும் போக்குவரத்து), பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜெயலத் (தெற்கு மாகாணம்) மற்றும் பிதிப் பொலிஸ் மா அதிபர் ரஜித ஸ்ரீ தமிந்த (துணை சேவைகள்) ஆகியோர் தற்போதைய நிலையில் பதவி நிலையில் மூப்பில் அடுத்த பொலிஸ் மா அதிபராகும் வாய்ப்பைக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் சில மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் தற்போது சக்திவாய்ந்த அரசியல்வாதிகள் மற்றும் முன்னணி பிக்குகளைப் பிடித்து பொலிஸ மா அதிபர் பதிவயைக் கைப்பற்ற தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சில தரப்பினர் தற்போது பதில் பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றி வரும் பிரியந்த வீரசூரியவுக்கே பொலிஸ் மா அதிபர் பதவியையும்வழங்குமாறு ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனராம். ஆளும்தரப்பு இது விடயத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் ஓகஸ்ட் 5 நாடாளுமன்றத் ல் நிறைவேற்றப்பட்டதும் நிறைவேற்றப்பட்டால், ஜனாதிபதி அவரைப் பதவி நீக்கம் செய்வார். அதன் பின்னர் அந்தப் பதவிக்கு பொருத்தமானவரின் பெயரை ஜனாதிபதி உடனடியாக அரசமைப்புச்சபைக்கு பரிந்துரைக்கவேண்டும். சபை அவரது பெயரை ஏற்றுக்கொண்டால் அவரே அடுத்த பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்பார். .

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## செம்மணி மனிதப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்தில் இந்த மனிதப் புதைகுழி அகழ்வு மிகமுக்கியமான முதற்கட்ட செயன்முறையாகும். அதேவேளை இந்த அகழ்வுப்பணிகள் மற்றும் விசாரணை செயன்முறை என்பன சர்வதேச மனித உரிமைகள்சட்டங்கள்மற்றும்நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறுஇலங்கைஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம். குறிப்பாக அவை உயிரிழந்தோரினதும், அவர்களது குடும்பத்தாரினதும் உரிமைகளையும் கௌரவத்தையும்உறுதிப்படுத்தும்வகையில் அமையவேண்டும்.

மனிதப்புதைகுழியில் கண்டறியப்படும் ஒவ்வொரு மனித எலும்புக்கூட்டின் பின்னணியிலும் நினைத்துப் பார்க்க முடியாத துன்பத்துக்கு முகங்கொடுத்த ஒரு குடும்பம் இருக்கிறது. எனவே இந்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பான தடயவியல் விசாரணைகள் தனிமனித கௌரவத்துக்கான மரியாதையுடனும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முழுமையான பங்கேற்புடனும்முன்னெடுக்கப்படவேண்டும். அதுமாத்திரமன்றி இக்குற்றங்களின் பாரதூரத் தன்மையைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், இச்செயன்முறையானது உச்சபட்சநேர்த்தியுடனும்,சட்டநியமங்களுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேசமேற்பார்வை இன்றியமையாததாகும். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வானது இலங்கையின் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் மிகமுக்கியமானதொரு தருணத்தைப் பிரதிபலிக்கின்றது.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமிவன்புணர்வுக்குஉட்படுத்தப்பட்டு, படுகொலைசெய்யப்பட்டசம்பவம்தொடர்பான வழக்கில் குற்றவாளியான லான்ஸ் கோப்ரல் சோமரத்னராஜபக்சவினால்1998ஆம்ஆண்டு வழங்கப்பட்ட வாக்குமூலத்தை அடுத்து செம்மணி மனிதப்புதைகுழி தேசிய மற்றும் சர்வதேசரீதியில் அவதானம்பெற்றது. அன்று முதல் இன்றுவரை இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாக மிகமோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பொறுத்தமட்டில் நீண்ட காலமாகத் தொடரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்குக்கான அழுத்தமானதும், வலிமிகுந்ததுமான அடையாளமாக அது திகழ்கின்றது.

சுமார் மூன்று தசாப்தங்களின் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் செம்மணி - சித்துபாத்தியில் மனித எச்சங்கள் கண்டறியப் பட்டிருப்பதானது உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பன அடையப்படுவதற்கு வழிவகுக்கக்கூடியவகையில் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய நம்பத்தகுந்த, வெளிப்படைத்தன்மைவாய்ந்த,உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறானவிசாரணைகள் உடனடியாகமுன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றது.

உலகளாவிய ரீதியில் அதிக எண்ணிக் கையான தீர்க்கப்படாத வலிந்து காணாம லாக்கப்படல் சம்பவங்கள் பதிவான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அங்கு 60,000 - 100,000க்குஇடைப்பட்டஎண்ணிக்கையிலான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியிருக்கக்கூடும் என மதிப்பி டப்பட்டிருப்பதுடன் அவற்றில் பெரும்பான் மையானவை 1983 - 2009 ஆம் ஆண்டு களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான ஆயுதப் போராட்ட காலத்தில் பதிவானவையாகும்.

ஆயுதமோதல் முடிவுக்குக் கொண் டுவரப்பட்டதன் பின்னர் போரின் பின்னரான கரிசனைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் கற்றுக்கொண்டபாடங்கள்மற்றும்நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேற ஆணைக்குழுக்கள் ஆளும்தரப்புக்களினால் உருவாக்கப்பட்டன. இருப்பினும் அந்த ஆணைக்குழுக்கள்பெரும்பாலும்நல்லிணக்கம் தொடர்பில் கவனம் செலுத்தினவே தவிர, பொறுப்புக்கூறல் குறித்து போதுமானளவு அவதானம் செலுத்தவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் சர்வதேச கட்டமைப்புக்களின் தொடர்ச்சியான வலியுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான உண்மையை அறியும் உரிமை, நீதி மற்றும் செயற்திறன்மிக்க இழப்பீடு என்பன தொடர்ந்து மறுக்கப்பட்டுவருகின்றன.

உண்மையைக்கண்டறியும்ஆணைக்குழு மற்றும் சர்வதேசத்தின் பங்கேற்புடனான நீதிச்செயன்முறை உள்ளடங்கலாக நிலைமாறுகால நீதிப்பொறிமுறையை நிறுவுமாறு வலியுறுத்தி 2015 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை இணைஅனுசரணைவழங்கியது.இருப்பினும் அத்தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்ட வாக்குறுதிகளில்பெரும்பாலானவைஇன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் 2016 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தொடக்கத்தில்நேர்மறையானதொருநகர்வாக நோக்கப்பட்டாலும், அரசியல்மயமாக்கல், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சுதந்திரம், மக்கள் மத்தியிலான நம்பிக்கையீனம் போன்றவற்றால் அக்கட்டமைப்பு நீண்டகாலமாகபின்னடைவைசந்தித்திருந்தது. தற்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளைக் கண்காணித்துவரும் நிலையில்,முன்னெப்போதையும்விடஇப்போது அவ்வலுவலகம் தனது சுயாதீனத்துவத்தை உறுதிசெய்யவேண்டியது அவசியமாகும்.

அதுமாத்திரமன்றி அவ்வலுவலகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களை சட்டரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துவோருடன் நெருங்கிய தொடர்புகளை பேணுவதுடன் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாகவும் செயற்படவேண்டும்.

நீதியை நிலைநாட்டுவதில் உள்ளகப்பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியைக் கருத்திற்கொண்டு நோக்கு கையில், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு செயன்முறையில் நிலையான சர்வதேச கண்காணிப்புஉள்வாங்கப்படவேண்டியதுமிக அவசியமாகும். இம்மனிதப்புதைகுழி அகழ்வு வெறுமனே தடயவியல் நடவடிக்கையாக மாத்திரம் அமையக்கூடாது. மாறாக இது வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தல், பாதிக்கப்பட்ட தரப்பினரை அடையாளங்காணல், குற்றவாளிகளைத் தண்டித்தல்மற்றும்பாதிக்கப்பட்டதரப்பினருக்கு உரியவாறான நிவாரணங்களை வழங்கல் என்பன தொடர்பில் உரிய சர்வதேச சட்டக் கடப்பாடுகளை இலங்கை ஆளும்தரப்பு பின்பற்றியிருக்கிறது என்பதற்கான முன்னுதாரணமாக அமையவேண்டும்.

மேலும்செம்மணிமனிதப்புதைகுழிஅகழ்வு செயன்முறையில் சர்வதேச கண்காணிப்பு மற்றும்சர்வதேசதொழில்நுட்பநிபுணத்துவம் என்பன உள்வாங்கப்படவேண்டும். அதற்கமைய சுயாதீன சர்வதேச தடயவியல் நிபுணர்கள் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும்.அகழ்வுசெயன்முறை தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் வெளிப்படைத் தன்மைவாய்ந்த முறையில் தெளிவுபடுத்தவேண்டும். அடையாளம் காணப்படும் மனித எச்சங்கள் உள்ளிட்ட சான்றாதாரங்கள் உரியமுறையில் பாதுகாக்கப்படுவதைஉறுதிப்படுத்தவேண்டும் - என்றுள்ளது.

## மாகாண சபைத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறவேண்டும். மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துவதாக தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இருப்பினும் இதுவரையில் அதற்குரிய எந்த நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு எடுக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தடையை நீக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் தனிநபர் பிரேரணையை முன்வைத்துள்ளார். இருப்பினும் அந்தப் பிரேரணை தொடர்பில் ஆளும்தரப்பு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்குமுழுமையானஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் ஆளும்தரப்பு அதற்குத் தயாராக இல்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் படுதோல்வியடைவது உறுதி என்பதால் தேர்தலை நடத்துவதற்கு காத்திரமான எவ்வித நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு எடுப்பதில்லை - என்றார்.

## என்புத்

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வார இறுதியில் நாடு திரும்பிய அவர், நேற்று செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியில் தற்போது அகழ்வுகள் இடம்பெற்றுவரும் இடத்திலிருந்தே இன்னும் அதிக எண்ணிக்கையில் என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்படலாம் என்ற சந்தேகம் உள்ளது.

இந்தக் குற்றப் பகுதியில் என்புத் தொகுதிகள் ஆழமாகப் புதைக்கப்படவில்லை. நில மட்டத்திலிருந்து ஐம்பது சென்ரிமீற்றர் ஆழத்தில்கூட உடல்கள் புதைக்கப்பட்டிருக்கின்றமையைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு உடல்கள்

தொடர்ச்சி 3ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

## என்புத்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைக்கப்பட்டிருக்கக்கூடிய விதமானது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றது.

செம்மணிமனிதப்புதைகுழிஅடையாளம் காணப்பட்ட பகுதி மயானமாக இருப்பதனால் ஒரு சில முறையாக புதைக்கப்பட்ட என்புத் தொகுதிகளும் கண்டறியப்படலாம். ஆனால், அவற்றை இலகுவாக வேறுபடுத்தி அறிந்துகொள்ள முடியும்.

கொக்குத்தொடுவாய், மன்னார், மாத்தளை போன்றஇடங்களிலும், 1994களுக்குப்பின்னர் தெற்கிலே சில இடங்களிலும் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வுடன் சம்பந்தப்பட்ட அனுபவமுடையவர்கள் இலங்கையில் இருந்தாலும்கூட மனிதப் புதைகுழியில் இருந்து அகழப்படும் என்புத் தொகுதிகள் பற்றிய பரிசோதனையைச் செய்வதற்கான நிபுணத்துவம் இலங்கையில் இல்லை. உலகில் ஒரு சில பல்கலைக்கழகங்களில் மாத்திரமே அந்தத் தொழில்நுட்பம் உள்ளது.

அகழ்ந்தெடுக்கப்படுபவை யாருடைய எச்சங்கள்என்பதுஅடையாளம்காணப்படுவது மிக முக்கியமானது.

அகழப்படும் என்புத் தொகுதிகளை ஆய்வுக்காக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர் சான்றுப்பொருள்களை எப்படிப் பாதுகாத்துக்கொள்வது போன்ற நிபுணத்துவ ஆலோசனைகளைக்கூட சர்வதேச நிபுணர்களிடம்இருந்தேபெறவேண்டியனவாக உள்ளன. ஆகவே, செம்மணி அகழ்வு நடவடிக்கைகளின்போதுநிபுணத்துவமுடைய சர்வதேச மேற்பார்வையாளர்களை வரவழைக்க வேண்டும் என இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

இந்த விடயங்களைச் சரியான முறையில் ஆராய்ந்தாலேநாட்டில்நடைபெற்றபலவிதமான சர்வதேசகுற்றச்செயல்களுக்கானசாட்சியங்கள் வெளிவரும். நல்லிணக்கத்தை நோக்கி நகர்கின்றோம்எனச்சொல்லுகின்றஅரசு இந்த உண்மைகள் வெளிவருவதற்கு ஏற்ற சகல நடவடிக்கைகளையும்மேற்கொள்ளவேண்டும்.

சர்வதேச குற்றச் செயல்களுக்கான சாட்சியங்கள் வெளி வருகின்றன. அரசு நல்லிணக்கத்தை நோக்கி நகர்கின்றோம் எனச்சொல்கின்றபோது, எந்தநல்லிணக்கமும் உண்மையின் அடிப்படையிலேயே செய்யப்படலாம். உண்மையை மூடி மறைத்து விட்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. எனவே, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான உண்மையும் வெளிவருவதற்குச்சகலநடவடிக்கைகளையும் அரசு செய்துகொடுக்கவேண்டும். அதற்கான அனுமதிகளைக் கொடுக்க வேண்டும்.

இதனைப் பரிசோதிக்கச் சர்வதேச நிபுணர்களை வரவழைத்து அவர்களின் கைகளில் அகழ்வுப் பணிகளை ஒப்படைக்கவேண்டும். இதற்கான ஏற்பாடுகளை நாமும் வேறு விதங்களில செய்து கொண்டிருக்கின்றோம்.

என்புத்தொகுதிகள்பற்றியபரிசோதனையை மேற்கொண்டுஅதன்முடிவுகளைஅறிவிக்கும் பொறுப்பு முழுவதும் சுயாதீனமாகச் செயற்படுகின்ற சர்வதேச நிபுணர்களிடத்தே கையளிக்கப்படவேண்டும். அதற்காக வரும் நாள்களில் நீதிமன்றம் ஊடாக ஏதாவது கட்டளைகள் பெறப்பட வேண்டிய தேவை ஏற்படின்அதற்கானபணிகளிலும்ஈடுபடுவோம் - என்றார்.

## மாலைதீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தகத்தில் நினைவுக் குறிப்பினை பதிவு செய்ததன் பின்னர், இரு நாடுகளின் தலைவர்களும் உத்தியோகபூர்வபுகைப்படம் பிடிக்கும் நிகழ்வில் கலந்துக் கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து இலங்கை மாலைதீவு நாடுகளுக்கிடையில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. கலந்துரையாடலைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இதற்கமைய மாலைதீவு வெளிவிவகார சேவை நிறுவனம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பரஸ்பர சட்ட உதவி வழங்கல் தொடர்பான ஒப்பந்தங்கள் பரிமாற்றப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையே பல்வேறு துறைகளிலான உறவுகளையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குற்றங்களைகையாள்வதில்பரஸ்பரசட்ட உதவி வழங்குவதை முதலாவது ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டாவது ஒப்பந்தம்இருநிறுவனங்களுக்கும்இடையே தகவல் மற்றும் ஆவணங்களை பரிமாறிக் கொள்வதை நோக்காக கொண்டுள்ளது.

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித என்புத் தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது. இதுவரை 96 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஆனந்தராஜாவின் கண்காணிப்பில்துறைசார்நிபுணர்பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றைய அகழ்வுப் பணிகளை யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி சயந்தன் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

## 2026 நடுப்பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் நாட்டில் திட்டமிட்ட வகையில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. சந்தையில் நிலவிய உப்பு தட்டுப்பாட்டுக்கு தீர்வாக 2025ஆம் ஆண்டு 6ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

உப்புஉற்பத்தியில்ஈடுபடும்நிறுவனத்துக்கே வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் உரிமையாளர் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

இறக்குமதி செய்யப்பட்ட உப்பு சுங்கத்தில் இருந்துஇதுவரையில்விடுவிக்கப்படவில்லை. ஆகவே சந்தையில் நிலவும் உப்பு விலையேற்றத்தை மேலும் அதிகரிப்பை கட்டுப்படுத்த இறக்குமதி செய்யப்பட்ட உப்பு தொகை அடங்கிய 6 கொள்கலன்களை விடுவிப்பதற்கு ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த உப்பு இறக்குமதியிலும் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஒவ்வொரு ஆண்டும் 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைய வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 5.1 சதவீதத்தால் பதிவாகிய நிலையில் இந்தாண்டு பொருளாதார வளர்ச்சி 3.5 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. 2026 ஆம் ஆண்டு 3.1 சதவீதத்தால் பொருளாதார வளர்ச்சி குறைவடைந்துள்ளது.

சர்வதேசநாணயநிதியத்தின்இலக்கிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு ஆளும்தரப்பிடம் எவ்வித திட்டங்களும் கிடையாது. பொருளாதார வளர்ச்சி ஒடுக்கமடையும் தன்மை காணப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் நிலைமை காணப்படுகிறது. எதிர்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்தால் அடுத்த ஆண்டு பொதுத்தேர்தலை நடத்தும் சூழலை ஏற்படுத்தலாம். ஆனால் எதிர்கட்சிகள் ஒன்றிணையும் நிலையில் இல்லை மாறாக ஜனாதிபதி பதவிக்கான ஆடையை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறேன் - என்றார்.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தோம்பலின் கதையை எடுத்துச் செல்கிறார்கள்எனபிரதமர்ஹரினிதெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சின்னமன் லைஃப் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

விழாவின்போது சின்னமன் லைஃப் ஹோட்டலுக்கு தங்கப் பதக்கமும் ஷங்கிரி-லா ஹோட்டலுக்கு வெள்ளிப் பதக்கமும் ஷெரட்டன் ஹோட்டல் கொழும்புக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டன.

பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இது வெறும் உணவைப் பற்றியது அல்ல. இது சிறப்பைப் பற்றியது மரபுரிமை பற்றியது அடையாளம் பற்றியது. இலங்கைக்கு இந்த உலகளாவிய பயணத்தில் எமது பங்கேற்பு சமையல்கௌரவத்தைவிடவும்அதிகமானது.

இது சர்வதேச உரையாடலின் மையத்தில் நம்மை நிலைநிறுத்துவதாகும்.

அது படைப்பாற்றல் கைவினை மற்றும் கலாச்சாரவெளிப்பாடுபற்றியஉரையாடலாகும். 2011 முதல் நாங்கள் முதன்முதலில் எங்கள் சமையல் தூதர்களை உலக அரங்கிற்கு அனுப்பியதிலிருந்து எமது பயணம் அர்ப்பணிப்பு தொலைநோக்கு மற்றும் எமது உள்ளார்ந்த ஆற்றல் பற்றிய வலுவான நம்பிக்கையால் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த மேடையில் இலங்கையின் பிரசன்னம் தற்செயலானது அல்ல. இது எமது விருந்தோம்பல் துறையின் முன்னேற்றம் எமது சமையல் கல்வி மற்றும் எமது தேசிய குறிக்கோளைப் பிரதிபலிக்கிறது.

இலங்கையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முக்கியமான பொருளாதாரத் துறைகள் மட்டுமல்ல. அவை நாம் யார் என்பதன் பலம் வாய்ந்த வெளிப்பாடுகளும் ஆகும். ஒவ்வொரு மறக்க முடியாத உணவு அனுபவமும்இ அது ஒரு சொகுசு ஹோட்டலில் பரிமாறப்பட்டாலும் அல்லது எளிய உள்ளூர் உணவகத்தில் பரிமாறப்பட்டாலும் எமது அடையாளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை உலகளாவிய நற்பெயரை உருவாக்குவதோடு மக்களுக்கும் கலாச்சாரங்களுக்கும் இடையே அர்த்தமுள்ள தொடர்புகளை உருவாக்குகிறது.

பாரம்பரியமாக ஆண்களின் ஆதிக்கத்தில் இருந்த ஒரு துறையில் இவ்வளவு பெண் சமையற் கலைஞர்கள் பங்கேற்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையின்சமையல்துறையில்வலுவான பெண்தலைமைத்துவம்வளர்ந்துவருவதைக் காண்பது ஊக்கமளிக்கிறது - என்றார்.

## சிவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

புத்தளம்மாவட்டத்தில்இருந்துஉள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் சக்தியின் பிரதேச உறுப்பினர்களுடன் சிலாபம் நகரில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நமதுநாட்டில்சட்டம்ஒழுங்கு, பொதுமக்கள் பாதுகாப்பு, பொது மக்களின் உரிமைகள் மற்றும் மக்களின் சுதந்திரத்தை அடிமட்ட ரீதியிலிருந்து பாதுகாப்பதற்கும், அமைதியைப் பேணுவதற்கும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் முன்னர் செயற்பட்டு வந்தன. இந்த சிவில் பாதுகாப்புக்குழுக்கள்சமூகத்தலைமைமற்றும் சமூகத்தின்பங்கேற்புடன்முன்னெடுக்கப்பட்டு வந்ததோடு, இது ஒருபோதும் அரசியல் மயமாக்கப்படவில்லை.

கட்சி அரசியலில் ஈடுபடாதவர்களுக்கும், கட்சி அரசியலில் ஈடுபட்டவர்களுக்கும் இதன் பதவி நிலைகளும் அங்கத்துவங்களும் காணப்பட்டன. இன்று, சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பதவி நிலைகளையும் அங்கத்துவங்களையும் ஜே.வி.பி உறுப்பினர் களுக்குப் பகிர்ந்து கொடுத்து, அவற்றைப் பகிரங்கப்படுத்தி வரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த நியமனங்கள் ஜே.வி.பி. கட்சி அலுவலகங்கள் மற்றும் கட்சியின் பிரதேச பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகங்களால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதன்மூலம்ஏனைய தரப்பினர்கள் மீது அரசியல் அழுத்தத்தை பிரயோகிக்கும் தந்திர வேலையில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தவறான செயலாகும். அனைவரும் அடி மட்டத்தில் கிராம நகர மட்டத்தில் வலுவாக ஒருங்கிணைந்தால் இந்த சட்டவிரோத அரசியல் செயல்முறையை தடுத்து நிறுத்த முடியும். இளைஞர் கழகங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் சங்கங்கள், ஓய்வூதிய சங்கங்கள் மற்றும் இறப்புகளைக் கவனிக்கும் சங்கங்களில்கூட இந்த தந்திர அரசியல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆளும்தரப்பு சிவில்சமூக அமைப்புகளை அரசியல்மயமாக்கி வருகின்றது. ஆளும்தரப்பிற்கு எதிரான அடிமட்ட பொது மக்கள் அபிப்பிராயம் வலுவாகி வரும் சந்தர்ப்பத்தில் அதனை கட்டுப்படுத்த இந்த கீழ்த்தரமான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. முழு கிராமமும் நகரமும் இதற்கு எதிராக நின்று எதிர்ப்பு தெரிவித்த பிரதேசங்களிலும் இடங்களிலும்இந்தஅரசியல்தந்திரமுயற்சிகள் தோல்வி கண்டுள்ளன.

அரசியல்வாதிகளின் அலுவலகங்கள் மூலம் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு குழுக்களை நியமிக்கும் நடவடிக்கையையும் முறையையும் நாம் தோற்கடிக்க வேண்டும். இதற்கு அனைவரும் ஒன்றிணைந்து வலுப்பட வேண்டும். இந்த சட்டவிரோத குழுக்களின் செல்லுபடித்தன்மையை சவாலுக்குட்படுத்த வேண்டும் - என்றார்.

## அடுத்த வருட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சந்தன அபேரத்னவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அதிகாரத்தில்இருக்கும்அரசியல்கட்சியின் தேவைக்கேற்ப மாகாண சபைத் தேர்தலை தாமதப்படுத்துதல், பகுதி பகுதியாக நடத்துதல் போன்றன கடந்த காலங்களில் இருந்த ஆளும்தரப்புக்களாலும் தமது வெற்றிக்காக மெற்கொள்ளப்பட்ட தந்திரோபாயங்களே.

நல்லாட்சி அரசாங்க காலத்தில், மாகாணசபை தேர்தல் வாக்களிப்பு திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாணசபை தேர்தல் முறைமை திருத்தம் மேற்கொள்ளல், அதற்கு ஏற்புடைய சட்ட நிலைமைகள், எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முடிவடையாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் மாகாணசபைதேர்தல்கைவிடப்பட்டிருக்கிறது.

11 வருடங்களுக்கும் அதிக காலம் சென்றும் இதுவரை எங்களால் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாமல் போயிருக்கிறது. இறுதியாக 2014 செப்டம்பர் 20ஆம் திகதி ஊவா மாகாணத்துக்கான தேர்தல் இடம்பெற்றது. அது இற்றைக்கு 11 வருடங்களுக்கு முன்பாகும்.

அதன் பிரகாரம் அதிகமான மாகாண சபைகள் 6 வருடங்களுக்கும் அதிக காலத்தில் இருந்து மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு நல்ல ஜனநாயக அடையாளம் அல்ல. இதற்காக தற்போதை ஆளும்தரப்பு பொறுப்புக்கூற வேண்டியில்லாவிட்டாலும் தேர்தலை நடத்துவதற்கு இருந்து வரும் தடைகளை நீக்கி, மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது இந்த ஆளும்தரப்பின் பொறுப்பாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்தக் காலப் பகுதியில் தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்ட திருத்தத்துக்கான இரண்டு தனிநபர் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், அது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து தேவையான சட்ட திருத்தங்களை மேற்கொண்டு, அடுத்த வருடம் முதல் காலாண்டிலாவது தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாகாண சபை முறைமை தொடர்பில் அல்லது தேர்தல் முறைமை தொடர்பில் முரண்பாடு இருக்குமானால் அதுதொடர்பில் எதிர்வரும் காலங்களில் கலந்துரையாடி தீர்மானித்துக்கொள்ள முடியும் என்பதுடன் விரைவாக தேர்தலை நடத்துவதற்காக பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கு குறுகிய சட்ட திருத்தம் பொருத்தம் என பிரேரிக்கிறோம். அத்துடன் பழைய முறைக்கு தேர்தலை நடத்துவதற்காக குறுகிய கால சட்ட திருத்தம் கொண்டுவருவதாக இருந்தால், பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக வேட்புமனுக்களில் 25 சதவிகிதம் ஒதுக்குவதையும் அதில் உள்ளடக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நம்பிக்கையை ஏற்படுத்துவது முக்கியம்

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி, இலங்கை அரசியலையும் சமூதாயத்தையும் ஆழமாகவே உலுக்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், ஒரு பேரழிவை ஏற்படுத்தியன. அதுமட்டுமல்லாமல், அந்த தாக்குதல்களின் பின்னணியில் இருந்த அலட்சியங்கள், மறைப்புகள், பொறுப்பின்மை, நுணுக்கமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளின் சதி என்பன குறித்த கேள்விகள், சந்தேகங்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்தத் தாக்குதல்களில் 270க்கும் மேற்பட்ட உயிர்கள் பறிபோனது மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்றுவரை நேர்மையான விசாரணையையும், நீதியையும் எதிர்நோக்கியபடியேதங்களது வாழ்க்கையை இழுத்துக்கொண்டு செல்கின்றன. தமிழர்கள் வாழ்வில் வழக்கமாகிவிட்ட நீதிக்கான காத்திருப்பும், குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் தப்ப விடப்படும் போக்கும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியிலும் தொடர்வதுஏற்றுக்கொள்ளமுடியாதது. இதனால்இந்தக்கொடூரச் சம்பவத்தின் பின்னணி தொடர்பில் நடந்துவரும் விசாரணைகள் தொடர்பாக நம்பிக்கையும் வெளிப்படைத்தன்மையும் ஏற்பட வேண்டியது இன்றைய முக்கியமான தேவை.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் கிழக்குப் படைப்பிரிவின் தளபதியாக இருந்தவரான தற்போதைய பாதுகாப்பு பிரத அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர இந்த பதவியில் தொடர்வது, நீதிச் செயற்பாடுகளின் மீதான நம்பிக்கையை பெரிதும் கேள்விக்குள்ளாக்கி வருகின்றது.

கொழும்பு புனித அந்தோனியார் கோவில் உட்பட மூன்று தேவாலயங்கள், மூன்று உல்லாச விடுதிகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பின்னால் செயற்பட்ட குற்றவாளிகள் யார்? அவர்களைப் பாதுகாத்தவர்கள் யார்? முறையான அறிவுறுத்தல்களை பெற்றும் செயற்படாத பாதுகாப்பு அதிகாரிகள் யார்? என்றெல்லாம் தேடப்பட வேண்டிய தருணத்தில், அந்தக் கேள்விகளுக்குப் பதிலாகக் கூடிய ஒருவரை அதே துறையில் நிர்வாகப் பதவியில் வைத்திருப்பது, எந்த விதத்திலும் நியாயமற்றது.ழி

இக்கேள்வியை எழுப்பியிருப்பது எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மட்டுமல்ல. கொழும்பு அதிபர் கார்டினல் மல்கம் ரஞ்சித் தலைமையிலான கத்தோலிக்க தேவாலயத் தரப்பும்தான். அருண ஜயசேகர பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகிப்பது விசாரணையின் நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என திருச்சபை விளக்கமளித்துள்ளது. இது ஆளும்தரப்பால் அதிகம் கவனத்தில் எடுக்கப்படவேண்டியதொரு விடயம்.

அருண ஜயசேகர கடந்த நாட்களில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்ததுபோல், சில இராணுவ உளவுத்துறையினர் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதே உண்மை என்றால், அவர் முன்கூட்டியே அதனைத் தெரிந்திருந்தாரா? தெரிந்தும் தம்மிடம் இருந்து தகவல்களை மறைத்தாரா? அல்லது கட்டாயம் காரணமாக இது தொடர்பான தகவல்களை வெளியிட முடியாமலிருந்தாரா? என்பன அனைத்தும் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டிய விடயங்களாகவே இருக்கின்றன.

அவர் தாமே விசாரணை துறைகளுக்கு வாக்குமூலம் வழங்கியிருப்பதாகக் கூறுவது, அவரும் ஒரு சாட்சியாளர், அல்லது சந்தேகநபர் என்று வரையறுக்கப்படக்கூடிய நிலையை அடையாளப்படுத்துகின்றது. அப்படியிருக்கையில், அவரை அதேதுறையில் நிர்வாகப் பொறுப்பில் வைத்திருப்பது விசாரணையின் சுதந்திரத்தையும் நேர்மையையும் கேள்விக்குள்ளாக்குவதற்கு சமமானது. விசாரணையின் போக்கில் காத்திரமான தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.

அரசியல் பழிவாங்கல் எனும் பெயரில் எந்தக் குழப்பத்துக்கும் இடமில்லாமல், இந்த விசாரணைகளை வெளிப்படையாகவும் நம்பிக்கையுடனும்தொடரச்செய்யவேண்டும்எனில், முதற்கட்டமாக அருண ஜயசேகர பதவியிலிருந்து விலகவேண்டும். அதுதான் ஆளும்தரப்பு இந்த விசாரணைகளை நேர்மையாக நடத்த விரும்புகிறது என்பதற்கான உண்மையான அறிகுறியாக அமையும்.

உண்மையும் நீதியும் என்ற அடிப்படையில் விசாரணைகளை எதிர்நோக்கும் மக்களின் நம்பிக்கையை உறுதியாக்க வேண்டுமெனில், ஆளும்தரப்பு உணர்ச்சிவசப்படாமல், கடமை உணர்வுடன் இந்தத் தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

# நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் பிரச்சினைகளுக்குப் பொறுப்புக்கூறட்டும் ஆளும்தரப்பு

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் சார்பாக தொடர்ந்து குரல் எழுப்பி, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுத் தருவோம் என உறுதியளித்த தற்போதைய ஆளும்தரப்பு, இவர்களின் விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பிரஜைகளுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரியபக்கபலத்தைவழங்கும்நுண்,சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம். கடந்த காலத்தில் பராட்டே சட்டத்தின் அமுலாக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இவர்களது அக்கால கடன் மறுசீரமைப்புகள் இடம்பெறவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் மற்றும் வங்குரோத்து நிலை ஆகிய மூன்று துயரங்களால் ஆதரவற்ற நிலையில் இருந்த இத்தரப்பினருக்கு அரசின் தலையீடு மூலம் நிவாரணம் கிடைக்கவில்லை. குறித்த தொழில்முனைவோர் சார்பாக தொடர்ந்து குரல் எழுப்பி, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுத் தருவோம் என உறுதியளித்த தற்போதைய ஆளும்தரப்பு, இவர்களின் விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டும்.

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு 50 சதவீதத்துக்கும் அதிகமாக பங்களித்து, இலட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்ந்து வரும் இந்த நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் மீது தேர்தல் காலத்தில் காட்டிய அதீத அன்பை செயல்படுத்த வேண்டிய நேரம் இதுவாகும். பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அப்போதுதான் 2028 இல் வெளிநாட்டுக் கடனை எம்மால் திருப்பிச் செலுத்தலாம்.

பேணிச்செல்ல வேண்டிய பொருளாதார வளர்ச்சி வேகத்தை பேணிச் செல்வதும் தற்போது சாத்தியமற்ற ஒன்றாக காணப் படுகின்றது. 2028 ஆம் ஆண்டில் நாடு தனது கடன்களை செலுத்த முடியாவிட்டால், மீண்டும் ஒருமுறை வங்குரோத்து நிலையை எதிர்கொள்ள நேரிடும். எனவே, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் மீது ஆளும்தரப்பு கவனம் செலுத்தி, தற்காலிக, நிலையற்றதீர்வுகளுக்குப்பதிலாகநிலையான தீர்வை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். எனவே, இந்தத் துறையில் பணிபுரிபவர்களின் பிரச்சினைகளைக் கைவிடாமல், இந்தப் பிரச்சினைகளுக்கு நடைமுறை ரீதியான தீர்வுகளை பெற்றுக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வங்கிக்கட்டமைப்பில்அவர்கள்எதிர்கொள் ளும் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. நாட்டில் தொழில்முனைவோரின் பிரச்சினைகளுக்கு வழங்கப்படும் தீர்வுகள், வங்கிகளின் செயல்பாடுகள், கடன் வட்டி, வட்டிச் சலுகைகள், தள்ளுபடிகள் குறித்து எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்பேன். முறையற்ற வகையில் பெரும் வட்டி மற்றும் கடன் சுமைகளை இவ்வாறு அறவிடுவதற்கு இடமளிக்க முடியாது. இந்த அநீதிக்கு எதிராகவும் குரல் எழுப்புவேன் என்றார்.

# செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் வெளிப்படையான விசாரணைவேண்டும்

## பொது ஜன பெரமுனவின் யாழ். அமைப்பாளர் தெரிவிப்பு



செம்மணி குறித்த அண்மைய தகவல்கள் மிகுந்த கரிசனையை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர் கீத்நாத் காசிலிங்கம், எந்தவொரு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் வகையில் வெளிப்படைத்தன்மை வாய்ந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்கொரியாவில் பணியாற்றிவரும் இலங்கையை சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர் ஒருவர் முறையற்ற வகையில் நடாத்தப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டமை குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில்பதிவொன்றைசெய்திருக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, தென்கொரியஜனாதிபதியின்நடவடிக்கையை பாராட்டியுள்ளார்.

அப்பதிவின் கீழ் பின்னூட்டல் கருத் தொன்றைபதிவிட்டுள்ளஎக்ஸ்தளபயனாளர் ஒருவர், செம்மணி மனிதப்புதைக்குழி தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்னவெனவும் இது குறித்து நாமல் ராஜபக்ச எந்தவொரு கருத்தையும் வெளியிடாதது ஏன் எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்கு பதிலளித்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் கீத்நாத் காசிலிங்கம், செம்மணி குறித்த அண்மைய தகவல்கள் மிகுந்த கரிசனையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு எந்தவொரு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் வகையில் வெளிப்படைத்தன்மை வாய்ந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழரின் நீதிக்கான போராட்டத்திற்கு வலுவான ஆதரவு தரும் கடப்பாடு கனடாவுக்கு உண்டு

## அந்தநாட்டின் கென்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் தெரிவிப்பு

செம்மணி மனிதப்புதைகுழியில் இருந்து கண்டறியப்படும் சான்றாதாரங்கள், போரின்போது காணாமல்போன கனேடிய வாழ் தமிழர்களின் அன்புக்குரியவர்கள் வலுகட்டாயமாகப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள், மௌனிக்கப்பட்டிருக்கிறார்கள், இரகசியமாகப் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதாக கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சி தலைவர் பியெர் பொய்லிவ்ர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி மனிதகுலத்துக்கு எதிரான மிகமோசமான குற்றங்களிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் கூறுவதை காதுகொடுத்துக் கேட்பதற்கும், நீதிக்கான போராட்டத்தில் வலுவாக நிற்பதற்குமான தார்மீகக் கடப்பாடு கனடாவுக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழினப் படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையைத் தாம் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, மனிதகுலத்துக்கு எதிராக இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான வலுவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்குத் தொடர்ந்து அழுத்தம் வழங்குவோம் என கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சி தலைவர் பியெர் பொய்லிவ்ர் உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் 'கறுப்பு ஜூலை' கலவரம் இடம்பெற்று இவ்வாரத்துடன் 42 ஆண்டுகள் பூர்த்தியடையும் நிலையில், அதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள நினைவுகூரல் செய்தியிலேயே பியெர் பொய்லிவ்ர் மேற்கண்டவாறு உத்தரவாதமளித்துள்ளார்.

கனேடியவாழ் தமிழர்கள் கறுப்பு ஜூலை கலவரத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் இவ்வேளையில், இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளால் கட்டமைக்கப்பட்டிருக்கும் மிகமோசமான பாரம்பரியத்தைத் தாம் மீண்டும் வலுவாக எதிர்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு 'செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் ஆரம்பமாகி இவ்வாரத்துடன் ஒரு மாதம் பூர்த்தியடைகின்றது. அம்மனிதப்புதைகுழியில் இருந்து குழந்தைகள் உள்ளடங்கலாக பலரது மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு தொடர்பில் 1983 ஆம் ஆண்டு வலியின் எதிரொலியாக புதிய ஆதாரங்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன' என்றும் பியெர் பொய்லிவ்ர் குறிப்பிட்டுள்ளார்.

'செம்மணி மனிதப்புதைகுழியில் இருந்து கண்டறியப்படும் சான்றாதாரங்கள், யுத்தத்தின்போது காணாமல்போன கனேடியவாழ் தமிழர்களின் அன்புக்குரியவர்கள் விபத்தில் காணாமல்போகவில்லை. மாறாக அவர்கள் வலுகட்டாயமாகப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். மௌனிக்கப்பட்டிருக்கிறார்கள். இரகசியமாகப் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மனிதகுலத்துக்கு எதிரான மிகமோசமான குற்றங்களிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் கூறுவதை காதுகொடுத்துக் கேட்பதற்கும், நீதிக்கான போராட்டத்தில் வலுவாக நிற்பதற்குமான தார்மீகக் கடப்பாடு கனடாவுக்கு இருக்கிறது. அதில் இந்தச் சுமையை நீண்டகாலமாக சுமந்துகொண்டிருக்கும் உலகவாழ் தமிழர்களுடன் உடன்நிற்பதும் உள்ளடங்குகிறது' எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## திலினி பிரியமாலிக்குப் பிணை

ஹோமாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட தொழிலதிபர் திலினி பிரியமாலியை, இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க ஹோமாகம நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜூன் 16 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு வழக்கிற்காக சந்தேகநபர் திலினி பிரியமாலி ஹோமாகம நீதிமன்றத்திற்கு வந்தபோது, சந்தேகநபருக்கு வழங்கப்பட இருந்த அழைப்பாணை ஒன்றை, நீதிமன்ற கடமையில் ஈடுபட்டிருந்த அழைப்பாணை விநியோகிப்பர் வழங்க முற்பட்ட போது சட்டவிரோதமாகத் தடுத்தல், குற்றவியல் மிரட்டல், கடமைக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் அழைப்பாணை விநியோகிப்பவரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இது தொடர்பாக, ஹோமாகம நீதவான் ரஜீந்திரா ஜயசுந்தர ஜூலை 14 ஆம் திகதி உத்தரவு ஒன்றை பிறப்பித்து, சந்தேகநபரை ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதன்படி, சந்தேகநபரான தொழிலதிபர் திலினி பிரியமாலி வாக்குமூலம் அளிக்க ஹோமாகம பொலிஸ் தலைமையகத்திற்கு வந்தபோது இன்று (28) கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நல்லைநகர் கொடிகாண நற்கருணை நல்கிடுவாய் !

நல்லைநகர் கந்தா வல்வினைகள் அறுப்பாய்
தொல்லை வரும்வேளை துடைத்திடுவாய் கந்தா
உன்னடியார் தினமும் உனைப்பாடிப் பணிவார்
உன்கோவில் கொடியை உளமகிழ்ந்து பார்ப்பார்

ஊரெலாம் இருந்து உனதடியார் குவிவர்
வேலவனே உந்தன் கோடியேற்றம் காண
கால்நடையாய் வருவார் காவடிகள் எடுப்பார்
கந்தாவுன் கருணை வேண்டியவர் தொழுவார்

கொடியேறி விட்டால் குழப்பங்கள் அகலும்
குறையிருந்தால் மனத்தில் நிறைவங்கே மலரும்
உமைமைந்தா உந்தன் ஒளிமுகத்தைக் கண்டால்
உளமதனில் இன்பம் ஊற்றெடுத்தே நிற்கும்

வெள்ளை மணல்மீது தம்முடம்பு புரள
உள்ளமதில் முருகா உன்நினைப்புப் பெருக
கள்ளமனம் கரைய கைகூப்பும் அடியார்
நல்லூரின் வீதியிலே எல்லையிலா விருப்பார்

வள்ளிதெய்வ யானையுடன் வடிவழகா வருவாய்
மால்மருகா வேல்முருகா எனவாயும் ஒலிக்கும்
எல்லையிலாப் பரம்பொருளாய் இருக்கின்றாய் முருகா
நல்லைநகர் நீயிருந்து நல்கிடுவாய் அருளை

ஈழத்தில் கருமேகம் சூழ்ந்திருக்கு முருகா
எதுநடக்கும் எதுநடக்கும் எனுமேக்கம் பெருக்கம்
ஆமுடை காதலுடன் அனவருமே உந்தன்
அடிபரவி நிற்கின்றோம் அருள்தருவாய் முருகா

நல்லைநகர் வந்துந்தன் திருமுகத்தைக் கண்டால்
கொல்லவரும் கொடியவரும் நல்லவராய் ஆவார்
எல்லையிலா கருணைநிறை ஈராறு முகமுடையாய்
நல்லைநகர் கொடிகாண நற்கருணை நல்கிடுவாய்



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**






காலைக்கதிர்
Kalaikkathir

# எதிர்க் கட்சிகள் சதி செய்தால் அதனை வெளிப்படுத்துங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

ஆளும்தரப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சதித்திட்டத்தில்ஈடுபடுவதாகக்கூறுகின்றனர். அவ்வாறுசதித்திட்டம்முன்னெடுக்கப்படுவது உண்மையெனில் அதனை வெளிப்படுத்த வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும். அதனை விடுத்து எதிர்க்கட்சிகளை குறை கூறிக் கொண்டிருப்பது சிறந்த ஆட்சியல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வருண ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயப் பகுதிகளில் காணப்படும் வன விலகங்குகளை விவசாயிகள் தங்களிடமுள்ள ஆயுதங்களால் அழிக்கமுடியும் என அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார். விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு இவர்களிடம் எவ்வித தீர்வும் இல்லை. இயற்கைப் பேரிடர்கள், வன விலங்குகளால் விவசாயத்துக்கு ஏற்படும் பாதிப்புக்களை எவ்வாறு தவிர்த்துக்கொள்வது என்பதற்கான பதில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் இருக்கவேண்டும்.

பிரச்சினைகளுக்கு தம்வசம் பதில் இல்லாததால் லால் காந்த போன்றவர்கள் இவ்வாறு நகைச்சுவையாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர். தமக்கான பொறுப்புக்களை தட்டிக் கழிப்பதற்காக விவசாயிகளிடம் பொறுப்புக்களை வழங்கிவிடுகின்றனர். பிரச்சினைக்குதீர்வினை வழங்குவதை விடுத்து தற்காலிகக் கதைகளை கூறுவதால் மோசமான விளைவுகளே கிடைக்கும். இவ்வாறான கருத்துக்களை கூறிக்கொண்டு ஆளும்தரப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகள்சதித்திட்டத்தில்ஈடுபடுவதாகக் கூறுகின்றனர்.

அவ்வாறு சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவது உண்மையெனில் அதனை வெளிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். தினந்தோறும் பாதாள உலகக் குழுக்களால் துப்பாக்கிச்சூட்டுக்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்கள் கொல்லப்படுகின்றனர். ஆனால் இன்று வரை இவற்றுக்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சிகளைக் குறைகூறிக் கொண்டிருப்பது சிறந்த ஆட்சியல்ல.

நாட்டில் கல்வி முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அந்த மறுசீரமைப்புக்கள் அரசாங்கத்தின் தேவைக்கு ஏற்றதாக இருக்கக் கூடாது. அத்தோடு ஆளும்தரப்பு அதன் கல்வி கொள்கையை தெளிவாகக் குறிப்பிட வேண்டும் - என்றார்.

# போதை ஏறிய வாகனச் சாரதியால் இரு உயிர்கள் அநியாயமாகக் காவு

## மேலும் 7 பேர் காயம்; கொழும்பு, பொரளையில் சம்பவம்

கொழும்பு பொரளை கனத்த சுற்றுவட்ட பகுதியில் பாரந்தூக்கி வாகனம் ஒன்று மின் சமிக்ஞைக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். இரு பொலிஸார் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர். குறித்த வாகனம் 6 மோட்டார் சைக்கிள்களுடனும் 3 கார்களுடனும் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பில் பாராதூக்கியின் சாரதி கைது செய்யப் பட்டிருந்துடன் அவர் ஒரு வகை போதைப் பொருளை பாவித்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் வெளிக்கொணரப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தை ஊடாக பொரளை கனத்த சுற்றுவட்ட பகுதியை நோக்கிபயணித்துக் கொண்டிருந்த தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான பாராதூக்கியொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து

நேற்று காலை 8 மணியளவில் சுற்றுவட்ட பகுதியில் மின் சமிக்ஞைக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுடன் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த வாகனம் அங்கிருந்த 6 மோட்டார் சைக்கிள்களுடனும் 3 கார்களுடன் இவ்வாறு மோதியுள்ளது.

சம்பவத்தின் போது இரு பெண்கள் உள்ளிட்ட 8 பேர் காயமடைந்த நிலையில் அவர்கள் சிகிச்சைக்காக

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும் அவர்களில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் ஓட்டுநர் உயிரிழந்தார்.

62 வயதுடைய அதுருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

காயமடைந்தவர்களில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்குவதாகவும் அவர்கள் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் கடமையாற்றுபவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

எவ்வாறாயினும் பாராந்தூக்கியின் சாரதி பொரளை பொலிஸாரினால் கைது செய்யப் பட்டிருந்தார். இந்த விபத்துச்சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளுக்கு அமைய பாராந்தூக்கியின் சாரதி கவனயீனமாகவும் பாதுகாப்பற்ற முறையிலும் வாகனத்தை செலுத்தியமையாலேயே இந்தவிபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சந்தேக நபர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போது அவர் "கேனபிஸ் செடைவா எல்"

என அழைக்கப்படும் ஒரு வகை கஞ்சாவை பயன்படுத்தியுள்ளமை வெளிக்கொணரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இன்று கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதனிடையே நேற்றையதினம் திங்கட்கிழமை அலுவலக நாள் என்பதால் பொரளை பொது மயானத்தை அண்மித்த பகுதியில் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

# அநுரவும் நாமலும் ஒரே விமானத்தில் நேற்று மாலைதீவுகளுக்குப் பயணம்

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க அரசுமுறைப் பயணமாக நேற்று மாலைத்தீவுகளுக்குச் சென்றபோது அவர் பயணித்த விமானத்தில் நாமல் ராஜபக்சவும் பயணம் செய்துள்ளார். அவரும் மாலைதீவிற்கே சென்றுள்ளார்.

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் முற்படாத காரணத்தால் நாமல் ராஜபக்சவைக் கைது செய்யுமாறு அம்பாந்தோட்டை நீதிவான் மன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்த நிலையில், அவர் அரசுத் தலைவர் பயணித்த விமானத்திலேயே பயணம் செய்துள்ளார்.

மாலைத்தீவில் இடம்பெறவுள்ள தனிப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காகவே நாமல் அங்கு சென்றுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இன்று நாட்டுக்கு திரும்புவார் என்றும் அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றுக்கு மனுவொன்றை சமர்ப்பித்து முன்னிலையாகுவார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# இளம் அரசியல் தலைவர்கள் குழு இந்தியாவிற்கு அரசியல் பயணம்

## கட்சிகளுக்கு இடையிலான தொடர்பை வலுப்படுத்த

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் பல்வேறு நிலைகளில் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்கான முதல் வகையான திட்டமாக இளம் அரசியல் தலைவர்களைக் கொண்ட குழுவொன்று இந்தியா பயணமாகியுள்ளது.

14 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த இளம் அரசியல் தலைவர்களைக் கொண்ட 24 பேர் கொண்ட குழு ஜூலை 14-25 வரை இந்தியாவுக்கு விஜயம் செய்தது. இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் , மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் இந்த விஜயத்தில் பங்கேற்றிருந்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு நிலைகளில் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்கான முதல் வகையான திட்டம் இதுவாகும். டெல்லி, பீகார் மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கான இந்த விஜயம் , இந்தியாவின் வளர்ச்சி முயற்சிகள் , பொருளாதார நவீனமயமாக்கல், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், ஜனநாயக மரபுகள் மற்றும் அதன் வளமான கலாச்சார பாரம்பரியம் பற்றிய சுருக்கமான கண்ணோட்டத்தை பிரதிநிதிகளுக்கு வழங்கியது.

டெல்லியில் இக்குழு வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியை சந்தித்தது. தொழில்நுட்பம், முதலீடு மற்றும் இணைப்பு ஆகியவற்றில் ஆழமான தொடர்புகளால் இந்தியா-இலங்கை கூட்டாண்மைக்கான எதிர்காலத் திட்டம் பலப்படுத்தப்படும் என்று வெளியுறவுச் செயலாளர் வலியுறுத்தினார்.

சட்டமன்றத்துக்கு விஜயம் செய்திருந்த இக்குழு சட்டமன்ற செயல்முறைகள், நாடாளுமன்றக் குழுக்களின் அமைப்பு மற்றும் பிற தொடர்புடைய விடயங்கள் குறித்த அமர்வுகளும் இதன் போது இடம்பெற்றன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இளம் எம்.பி.க்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் (எம்.எல்.ஏ.க்கள்) மற்றும் இளைஞர் தலைவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. இந்தப் பயணத்தின் போது, பீகார் மற்றும் கர்நாடகாவின் ஆளுநர்களையும் அவர்கள் சந்தித்தனர்.

இந்த அரசியல் பரிமாற்றங்களைத் தவிர ஏனைய பல நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பில் இந்தியாவின் வெற்றி இந்திய தனித்துவமான அடையாள ஆணையத்தில் உள்ள பிரதிநிதிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

கல்வியாளர்கள் மற்றும் சிந்தனையாளர்களுடனான தொடர்புகள் இந்திய பொருளாதாரம் மற்றும் வளர்ந்து வரும் வெளியுறவுக் கொள்கை, புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு உள்ளடட்டவை தொடர்பான அமர்வுகளும் இடம்பெற்றுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த இளம் தலைவர்களுக்கான இந்தப் பல்துறைத் திட்டத்தை இந்திய கலாச்சார உறவுகள் கவுன்சில் மற்றும் டில்வி வெளியுறவு அமைச்சகம் தொகுத்து வழங்கின. இந்தியா - இலங்கை கூட்டாண்மையின் வரம்பற்ற திறனை உணர்ந்து கொள்வதில் முக்கிய பங்குதாரர்களாக இளம் அரசியல் தலைவர்களின் பங்கை இந்த திட்டம் மீண்டும் உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2025இல் வெளியிடப்பெற்றது